மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.65/2019</u>

2026ம் ஆண்டு பிப்ரவரி 13ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விக்னேஷ் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>13.02.2026 வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. நான் 2017 ஆம் ஆண்டில் இரண்டு மாதங்கள் மட்டும்தான் உபயவாதிகளின் நிறுவனத்தில் ஓட்டுநராக பணியில் இருந்தேன் என்றும் நான் நிறுவன பொருட்களை கையாடல் செய்ததால் என்னை வேலையை விட்டு நீக்கி விட்டார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. 2017 ஆம் ஆண்டு எனக்கு ஓட்டுநர் உரிமமே கிடையாது. அதற்கு பின்னிட்டு இரண்டு ஆண்டுகள் கழித்து தான் ஓட்டுனர் உரிமம் வாங்கினேன்.

2. நான் இதற்கு முன்பு நீதிமன்ற சாட்சியத்தில் உபயவாதிகளின் நிறுவனத்திற்கு வேலைக்கு வருவதற்கு முன் பால் டெம்போவில் ஓட்டுனராக பணிபுரிந்ததாக சாட்சியம் அளித்துவிட்டு தற்போது நான் 2017 ஆம் ஆண்டில் தான் ஓட்டுநர் உரிமம் வாங்கியதாக முன்னுக்குப் பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

நான் பால் டெம்போவில் வேலை செய்ததாக தான் சாட்சியமளித்துள்ளேன். ஓட்டுனராக வேலை செய்ததாக சாட்சியம் அளிக்கவில்லை ஒன்றாம் பிரதிவாதி தான் நான் உபயவாதிகள் நிறுவனத்தில் கையாடல் செய்ததை அறிந்து என்னை வேலை விட்டு நிறுத்திவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

3. நான் வாதியோடு சேர்ந்து கொண்டு வாதியின் தவறான பழக்க வழக்கங்களுக்கு இன்று வரை அவரோடு சேர்ந்து கொண்டு இருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல 2016 ஆம் ஆண்டு நான் ஆம்ஸ்ட்ராங் நிறுவனத்தில் வேலை பார்த்தேன் என்பதற்கு ஆவணங்கள் ஏதேனும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணங்கள் இல்லை சிசிடிவி பதிவுகள் மட்டும் உள்ளது அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இதுவரை செய்யவில்லை. 2018 ஆண்டு வரை உபயவாதிகளின் நிறுவனத்தில் வரவு செலவு கணக்குகளை நான்தான் பார்த்தேன் என்பதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை நான் வரவு செலவு கணக்குகளை எப்போதும் பார்த்ததில்லை.

4. நான் ரிப்போர்ட்டை மட்டும் வாதியிடம் கொடுப்பேன் அவர் பார்த்து முடிவு செய்து கொள்வார். நான் உபயவாதிகளை நிறுவனத்தில் எப்போதும் வரவு செலவு கணக்குகள் பார்த்ததில்லை என்று சொல்கிறேனா என்றால் ஆமாம். சென்னையில் ஒரு கிளை இயங்கி வருவதாகவும் அந்த கிளை நிறுவனத்தை 1ம் பிரதிவாதியை பார்த்துக் கொள்வதற்கு வாதி அனுமதி கொடுத்திருந்ததாகவும் நான் சொல்லியுள்ள சங்கதிகளை பொறுத்து ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணங்கள் என்னிடம் எதுவும் இல்லை.

வாதி 1ம் பிரதிவாதிக்கு சென்னை கிளை நிறுவனத்தை நடத்தி வருவதற்காக வாகனங்கள் கொடுத்திருந்தார் என்று நான் சொல்லியுள்ள சங்கதிகளை பொறுத்து ஆவணங்களை ஏதேனும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5. அது பற்றி எனக்கு தெரியாது. வாதி தற்போது மல்லிகை பைனான்ஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறாரா என்றால் இல்லை. வாதி தற்போது என்ன பெயரில் தொழில் செய்து வருகிறார் என்றால் மல்லிகை ப்ராடக்ட்ஸ் என்ற பெயரில் உணவுப் பொருட்கள் தயாரிப்பு செய்து வருகிறார் வாதி, 1ம் பிரதிவாதி மீது காவல் நிலையத்தில் என்ன புகார் கொடுத்தார் என்பது சம்பந்தப்பட்ட ஆவணங்களை நான் தாக்கல் செய்து உள்ளேன் என்றால் இல்லை அதை நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். வாதி எனக்கு ஏதாவது உறவினரா என்றால் இல்லை.

6. நான் தற்போது வாதியின் கம்பெனியில் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் அவர் கம்பெனியில் நான் வேலை செய்யவில்லை. நான் தற்போது என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் வேறு ஒரு பைனான்ஸ் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன் மல்லிகை பைனான்ஸ் மற்றும் மல்லிகை ரியல் எஸ்டேட் ஆகிய தொழில்களை நானும், வாதியும் சேர்ந்து ஒன்றாக நடத்தி வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. நான் உபயவாதிகள் நிறுவனத்தில் வேலை செய்வதாகவும் எனக்கு அது சம்பந்தப்பட்ட விவரங்கள் நன்கு தெரியும் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

7. நான் வாதிக்கு வேண்டியவர் என்பதனாலும் பிரதிவாதிகள் மீது உள்ள கோபத்தினாலும் நான் வாதிக்கு ஆதரவாக உண்மைகளை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்கத்தக்கது அல்ல என்றும் இந்த நிராகரிக்கதக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.02.13 19:06:03 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்